கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள், சென்னை – 6
பிறப்பிப்பவர் : முனைவர். திரு. சி. பூரணசந்திரன், எம்.பிஎ, எம்பில், பி.எச்.டி.,

---

ந.க.எண். 26966/பி1/2021 நாள்.25.11.2021

பொருள்: கல்லூரிக் கல்வித் துறை – 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை [illegible] பணியிலமர்த்தப்பட்ட [illegible] பணியினை வரன்முறைப்படுத்துதல் – தஞ்சாவூர் மண்டலம், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம், இளநிலை உதவியாளர், திருமதி.செ.கனிமொழி – பணியினை வரன்முறைப்படுத்துதல் – ஆணை வழங்குதல்.

பார்வை: அரசாணை (நிலை) எண். 48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 26.02.2021

அரியலூர், அரசு கலைக் கல்லூரி (நிலை)யில், பொருளியல் உதவிப்பேராசிரியராகப் பணியாற்றி பணியிலிருக்கும் காலத்தில் 06.02.2016 அன்று இயற்கையெய்திய திரு.வே.செல்வராசு என்பவரின் மனைவி திருமதி.செ.கனிமொழி என்பவருக்கு தஞ்சாவூர் மண்டலம், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் வழங்கப்பட்டு 18.06.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் பிறந்த தேதி 13.01.1992 ஆகும். பணிநியமனத்தின்போது எஸ்.எஸ்.எல்.சி தேர்ச்சி பெற்றுள்ளார். இளநிலை உதவியாளர் பதவிக்குரிய முழுத்தகுதி பெற்றுள்ளதாலும், உரிய வயதினை நிறைவு செய்துள்ளதாலும், அன்னாரின் பணி நியமனத்திற்கோ, வயது வரம்பிற்கோ விதித் துறப்பாணைகள் பெற வேண்டிய நிலை எழவில்லை.

02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்ய சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் (Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அரசு பணியாளரின் பணியினை வரன்முறை செய்து செயல்முறை ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, திருமதி.செ.கனிமொழி என்பார் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து 18.06.2018 முற்பகல் முதல் அன்னாரது பணியினை வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

பெறுநர்

1. திருமதி.செ.கனிமொழி,
   இளநிலை உதவியாளர் (உரிய வழியாக)
2. கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்,
   கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம்,
   தஞ்சாவூர் மண்டலம்.

Scanned By Camera Scanner